## தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் தன்னிச்சையான நடவடிக்கைகள்!

# இந்திய நாட்டின் ஜனநாயகத்துக்கும் குடியரசுக்கும் ஆபத்து!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி எச்சரிக்கை!

சென்னை, செப். 26-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் மீது, மற்ற இரு தேர்தல் ஆணையர்களும் புகார் தெரிவித்துள்ளனர். தேர்தல் ஆணையத்திற்குள் நடந்து வரும் பிரச்சினைகள் குறித்து நேற்று முன்தினம் (23.9.2026) ஆங்கில நாளேடான 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' வெளிக் கொண்டு வந்துள்ள செய்திகள் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி, தேர்தல் ஆணையம் என்பது சுயேட்சையான அமைப்பாகும். ஒரே ஒரு தேர்தல் ஆணையர் மட்டுமே இருந்த சூழலில், 1989 ஆம் ஆண்டு மூன்று தேர்தல் ஆணையர்கள் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டு, இரண்டரை மாதங்கள் மட்டுமே இருந்தது. பின்னர், 1993 ஆம் அக்டோபர் முதல் மூன்று தேர்தல் ஆணையர்கள் என்பதும், அதில், ஒருவர் தலைமைத் தேர்தல் ஆணையர் என்பதுமான நடைமுறை உருவாக்கப்பட்டது. ஒருவரே தன்னிச்சையாக முடிவெடுப்பதற்குப் பதிலாக, நாட்டின் மிக முக்கியமான இந்தப் பொறுப்பில், கூட்டுப் பொறுப்பும், கூட்டு அறிவும் (Collective Wisdom) இருப்பது நல்லது என்ற நோக்கத்திற்காகவே, இந்த மூன்று தேர்தல் ஆணையர்கள் என்ற முறை உருவாக்கப்பட்டது.

தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான 'அனூப் பரன்வால் எ. இந்திய ஒன்றிய அரசு' வழக்கில் தேர்தல் ஆணையர் சார்பற்றவராக இருக்க வேண்டும் என்ற நோக்கில், 2023 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் உச்சநீதிமன்றத்தின் அய்ந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பு வழங்கியது. அதில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், இந்தியத் தலைமை நீதிபதி அடங்கிய மூவர் குழு தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுத்து குடியரசுத் தலைவர் மூலம் நியமிக்கலாம் என்று கூறியதுடன், நாடாளுமன்றம் இதற்கான தனிச் சட்டத்தை இயற்றும் வரை இந்த ஆணை இருக்கும் என்று கூறியது. ஆனால், அதே ஆண்டின் இறுதியில், தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இந்தியத் தலைமை நீதிபதிக்குப் பதிலாக, ஓர் ஒன்றிய அமைச்சர் இடம்பெறும்வகையில் சட்டத்தை வடிவமைத்து நிறைவேற்றியது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இதன் மூலம், நடுநிலைமை ஏற்படுவதற்கு மாறாக, மூவரில் இருவர் (பிரதமர், ஒன்றிய அமைச்சர்) ஆளுங்கட்சி சார்பானவர்களாகவும், ஒருவர் மட்டுமே மாற்று அணியினராகவும் (எதிர்க்கட்சித் தலைவர்) இருக்கும் வகையில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. நாடாளுமன்றத்தின் இந்தச் சட்டம், உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு மாறானது என்று கூறி தொடுக்கப்பட்ட வழக்கு (ஜெயா தாக்கூர் எ. இந்திய ஒன்றிய அரசு) உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், இரு நீதிபதிகளின் மாறுபட்ட முடிவுகள் காரணமாக, அவ்வழக்கு உச்சநீதிமன்றத்தின் அரசியலமைப்புச் சட்ட அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது. (அதுகுறித்து பிறகு தனியாக அறிக்கை வெளிவரும்).



**ஞானேஷ்குமாரின் செயல்பாடுகள்!**

மேற்சொன்ன 2023 ஆம் ஆண்டு சட்டத்தின் படி நியமிக்கப்பட்டவர்கள்தான் தற்போது உள்ள தேர்தல் ஆணையர்கள் மூவரும். அவர்களில் டாக்டர் சுக்வீர் சிங் சந்து, ஞானேஷ் குமார் ஆகியோர் 2024 மார்ச் 15 அன்றும், மற்றொரு தேர்தல் ஆணையர் டாக்டர் விவேக் ஜோஷி 2025 பிப்ரவரி 19 அன்று நியமிக்கப்பட்டதுடன், அன்றே ஞானேஷ் குமார் தலைமைத் தேர்தல் ஆணையராகவும் பதவி உயர்வு பெற்றார். (ஓய்வு பெற்ற அய்.ஏ.எஸ். அதிகாரிகளான சந்துவும், ஞானேஷ் குமாரும் 2024 இல் தேர்தல் ஆணையர்களாக நியமிக்கப்படும் போதே காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.)

இவர்களில், தலைமைத் தேர்தல் ஆணையர் மட்டும் தன்னிச்சையாகச் செயல்படுவதும், முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்ட கடந்த பல மாதங்களில் தேர்தல் ஆணையத்தின் கூட்டமே கூட்டப்படாமல் தவிர்க்கப்பட்டதும், மற்ற இருவரின் கருத்துகள் அறியப்படாமலே முடிவுகள் எடுக்கப்பட்டதும் இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

**கேபினெட் செயலாளருக்கு இரு ஆணையர்களின் கடிதம்!**

இது தொடர்பாக டாக்டர் சுக்வீர் சிங் சந்துவும், டாக்டர் விவேக் ஜோஷியும் தனித்தனியாக, இந்தியாவின் தலைமைச் செயலாளரான கேபினெட் செயலாளருக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

புதிய வாக்காளர்களைச் சேர்ப்பது, பெயர்களை நீக்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து தங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். புதிய வாக்காளர்கள் மீதான நடவடிக்கைகள் சட்டத்தால் அங்கீகரிக்கப்படாதவை என்றும், சட்டவிரோதமானவை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாடு முழுவதும் 13 கோடி வாக்காளர்களை நீக்கம் செய்துள்ள எஸ்.அய்.ஆரை நடைமுறைப்படுத்தும் முடிவு குறித்து கேள்விகள் எழுந்துள்ளன. (பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே.அத்வானி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், மேனாள் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் ஆகியோரின் வாக்குகளே எஸ்.அய். ஆரால் கேள்விக்குள்ளாகி உள்ளன!) எஸ்.அய்.ஆர் எனப்படும் 'வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர மறு ஆய்வை' நாடு முழுவதும் அமல்படுத்தும் பணி மூன்று ஆணையர்களின் மேற்பார்வையிலும் நடைபெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தங்களுக்குத் தெரியாமலே எடுக்கப்பட்ட முடிவுகள், பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் குறித்து, கடந்த 10 மாதங்களில் குறைந்தது 14 முறையாவது சந்து மற்றும் ஜோஷி ஆகியோர் அதிகாரப்பூர்வமாகத் தங்கள் ஆட்சேபனையைப் பதிவு செய்துள்ளனர் என்று தற்போது தெரியவந்துள்ளது. அதில் ஒரே நாளில் இருவருமாக நான்கு முறை தங்கள் மறுப்பைப் பதிவு செய்துள்ளனர்.

எனினும், இவை எதுவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமல், தலைமைத் தேர்தல் ஆணையரின் முடிவு மட்டுமே செயல்படுத்தப்பட்டிருக்கிறதென்றால், நாட்டின் தன்னிச்சையான அதிகாரம் படைத்த, நடுநிலைமையில் நின்று செயலாற்ற வேண்டிய ஓர் ஆணையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அதிகார வரம்பு மீறல், அரசியலமைப்புச் சட்ட மீறல் என்பது சாதாரணமானதா?

மூன்று தேர்தல் ஆணையர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களில் எது பெரும்பான்மையோ அது தானே இறுதி செய்யப்படும். நீதிமன்றங்களிலும் இது தானே நடைமுறை! உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாகவே இருந்தாலும், அவர் இடம்பெற்றிருக்கும் ஓர் அமர்வில் பெரும்பான்மைத் தீர்ப்பு அவரது தீர்ப்புக்கு மாறாக இருந்தாலும், பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்ப்பு தானே உச்சநீதிமன்றத்தின் முடிவாக அமையும்.

ஆனால், தேர்தல் ஆணையப் பிரச்சினையில் இவற்றுக்கு மாறாக, தலைமைத் தேர்தல் ஆணையரே, தனக்கு இல்லாத அதிகாரங்களை எடுத்து வைத்துக் கொண்டு, பிற தேர்தல் ஆணையர்களின் கருத்துகளை, மறுப்பைப் புறக்கணித்துள்ளார் என்றால், நாடு நீதியின் போக்கில் தான் செல்கிறதா? சட்டப்படிதான் நடக்கிறதா என்ற மிக முக்கியமான கேள்வி வெடிக்கிறதே! இரண்டு ஆணையர்களின் எழுத்துப்பூர்வமான அறிவுறுத்தலுக்கு முரணாகத் தேர்தல் ஆணையம் செயல்பட்டதாகவும், அதன் நடவடிக்கை "அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டதும், சட்டவிரோதமானதுமான" என்றும் டாக்டர் சந்து, தனது கடிதம் ஒன்றில் குற்றம் சாட்டியுள்ளார்.

ஞானேஷ் குமார் தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருக்கும்போதுதான் இத்தனை மாநிலத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன என்றால், அவற்றின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதல்லவா?

வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் அதிகாரம் அந்தந்த தொகுதிகளில் உள்ள தேர்தல் பதிவு அதிகாரிக்கு (ERO) மட்டுமே உரியது. இந்த அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது - ஓரிடத்தில் குவிக்கப்படவில்லை என்பதுதான், வாக்காளர் பட்டியல் முறைகேடு குறித்த ஒவ்வொரு அரசியல் குற்றச்சாட்டுக்கும் எதிராக ஆணையத்தின் வாதமாக இருந்துவந்தது. ஆனால், இப்போது இணையத்தில் அப் பட்டியலை அணுகுவதிலேயே அவர்களுக்கு அதிகாரம் குறைக்கப் பட்டு, தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது; அதிகாரம் 'டில்லியில்' குவிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**விரிவாக விசாரிக்க வேண்டியது அவசியம்!**

வாக்காளர் மென்பொருளின் நம்பகத்தன்மை குறித்த கவலைகளை தேர்தல் ஆணையர்களே எழுப்பியிருப்பது, எதிர்க்கட்சிகள் இத்தனைக் காலமாக எழுப்பிவரும் பிரச்சினை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது. இப்போது வெளிவந்திருப்பது கூட பனிப்பாறையின் ஒரு முனை (Tip of the Iceberg) மட்டுமே! இன்னும் தேர்தல் ஆணையத்தின் அதிகாரக் குவிப்பினாலும், சார்பு நடவடிக்கைகளாலும் எத்தகைய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்பதை விரிவாக விசாரிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

கடும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள தலைமைத் தேர்தல் ஆணையர் தானாகப் பதவி விலகுவதே நியாயம் ஆகும். அதற்கு அனைவரும் வலியுறுத்த வேண்டும். குடியரசுத் தலைவர் தலையிட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். பின்னணியில் இருந்து இவரை இயக்குபவர்கள் யார் என்பது வெளிக்கொண்டு வரப்படவேண்டும். இது மிகவும் அவசரமான காலகட்டம்! நாட்டின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்துக்கு அடிப்படையான முறைகேடுகள் வெளிச்சத்திற்கு வரத் தொடங்கியுள்ளன.

மேலும் ஒரு செய்தியை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவது இன்றியமையாததாகும். 2023 ஆம் ஆண்டு தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்தில், 'பணிக் காலத்தில் தேர்தல் ஆணையர்கள், தலைமைத் தேர்தல் ஆணையர் ஆகியோர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக, பிற்காலத்தில் அவர்கள் மீது வழக்குத் தொடுக்க முடியாத' அளவுக்குச் சட்டத்தைத் திருத்தியுள்ளனர். இதன்மூலம், தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெச்சரிக்கையாகச் செய்துகொண்டு, அதன்பிறகுதான் முறைகேடுகள் திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளன என்று சந்தேகிப்பதற்கு முகாந்திரங்கள் உள்ளன.

**ஓரணியில் நின்று களம் காணுவது அவசியம்!**

ஏற்கெனவே ஓட்டுத் திருட்டு, வாக்காளர் பட்டியல் திருத்தம், வாக்குப் பதிவு இயந்திரங்கள் மீதான நம்பகத் தன்மை இன்மை என்ற பிரச்சினைகளுடன், தலைமைத் தேர்தல் ஆணையரின் அதிகார அத்துமீறலும் வெளிவந்துள்ளது. நாட்டில் நடந்து வரும் அத்தனை அநீதிகளும், பாசிசப் போக்கும் இந்தத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் உள்ள ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வினாலேயே மேற்கொள்ளப்படுகிறது என்ற சூழலில், அத்தனை ஆபத்துகளுக்கும் அடிப்படை, இக் காலகட்டத்தில் நடந்த தேர்தல்களே - அதில் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ள முறைகேடுகளே! நாட்டின் ஜனநாயகமே கேள்விக் குறியாகி, இந்தியக் குடியரசுக்கே ஆபத்து நேர்ந்துள்ள இந்தச் சூழலில், அனைத்து எதிர்க்கட்சிகளும், முன்னாள், இந்நாள் மாநில முதலமைச்சர்களும், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அமைப்புகளும், சமூக ஆர்வலர்களும், ஊடகங்களும் இப் பிரச்சினையில் ஓரணியில் நின்று களம் காணுவது அவசியமாகும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



நாள் : 26.09.2026 (சனிக்கிழமை)

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | மாலை 4.30 | நத்தப்பாளையம் |
| 2. | மாலை 5.30 | மூலனூர் |
| 3. | இரவு 6.30 | கொளத்துப்பாளையம் |
| 4. | இரவு 7.30 | குண்டடம் |

நாள் : 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | காலை 9.30 | கன்னிவாடி |
| 2. | காலை 10.15 | வடுகபட்டி |
| 3. | காலை 11.00 | கணபதிபாளையம் |
| 4. | காலை 11.45 | தளவாய்பட்டணம் |

மதிய உணவு இடைவேளை

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | மாலை 3.30 | பெரியார் சிலை |
| 2. | மாலை 4.15 | அரசுமேல்நிலைப்பள்ளி(கோட்டைமேடு) |
| 3. | மாலை 5.00 | பூளவாடி ரோடு கார்னர் |

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

---

## தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

## கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



நாள் : 28.09.2026 (திங்கட்கிழமை)

| வ.எண் | நேரம் | ஒன்றிய/நகர/பேரூர் கழகங்கள் | இடம் |
|---|---|---|---|
| 1. | மாலை 5.00 | குண்டடம் மேற்கு ஒன்றியம் | மானூர்பாளையம் |
| 2. | மாலை 6.00 | தாராபுரம் மேற்கு ஒன்றியம் | கோவிந்தாபுரம் |
| 3. | இரவு 7.00 | தாராபுரம் கிழக்கு ஒன்றியம் | மணக்கடவு |
| 4. | இரவு 8.00 | மூலனூர் மேற்கு ஒன்றியம் | கிளாங்குண்டல் |

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி

---

# சிவகங்கையில் நடைபெற்ற வேளாண்மை கருத்தரங்கு!

## எந்த பயனுமில்லை என விவசாயிகள் புலம்பல்!

சிவகங்கை, செப். 26-

சிவகங்கை மாவட்ட வேளாண்மை துறை சார்பில் இரண்டு தினங்களுக்கு முன்சிவகங்கையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் வேளாண்மை கண்காட்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் தலைமையில் நடைபெறும் இந்த கண்காட்சி கருத்தரங்கில் கனிமவளத் துறை அமைச்சர் டி. கே.பிரபு பங்கேற்று விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பூரை ஆற்றுவார் என்று அழைப்பிதழ் வெளியாகி விளம்பர படுத்தப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் கள் பெயர் இடம் பெற்றிருந்தது.

சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ராஜ்யசபா உறுப்பினர் ப.சிதம்பரம் பெயர் இடம் பெறவில்லை. மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் கலந்துகொண்டு கருத்தரங்கினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இதில் மாவட்டம் முழுவதிலும் இருந்து ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டார்கள். விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள பிரச்சனைகளை விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகளை அமைச்சரிடம் நேரில் கூறி நிவாரணம் பெறலாம் என்று கருதி அனைவரும் மனுக்களுடன் காத்திருந்தார்கள். அமைச்சர் டி.கே.பிரபு கருத்தரங்கில் பங்கேற்பதாக ஒப்புதல் கொடுத்திருந்தார். எம்.எல்.ஏக் கள் திருமதி குழந்தைராணி சிவகங்கை , இளங்கோவன் மானாமதுரை ,கார்த்தி சிதம்பரம் எம்.பி. ஆகியோர் மட்டும் கலந்து கொண்டார்கள். திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாச சேதுபதி பங்கேற்கவில்லை . காலை 10 மணிக்கு துவங்கிய கண்காட்சி மதியம் வரை நடைபெற்றது.

இதில் அமைச்சர் பங்கேற்பார் என்று விவசாயிகள் ஆர்வத்துடன் காத்திருந்தார்கள் . அமைச்சர் கருத்தரங்கிற்கு வரவில்லை என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட. வில்லை.மாவட்டம் முழுவதிலும் இருந்து பங்கேற்ற .விவசாயிகளும் பகல் 2 மணி வரை காத்திருந்து தங்களது குறைகளை அமைச்சரிடம் நேரில் தெரிவிக்கலாம் என்று எதிர்பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்கள். பெயரளவில் இந்த வேளாண்மை கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பங்கேற்ற விவசாயிகள் இந்த கருத்தரங்கிற்கு வந்ததில் எந்த பயனும் இல்லை என்று புலம்பியவாறு சென்றார்கள். அமைச்சர் இந்த நிகழ்ச்சிக்கு வரவில்லை என்று முன் கூட்டியே அதிகாரிகள் தெரிவித்திருந்தால் தொலை தூரப் பகுதிகளிலிருந்து வந்திருந்த விவசாயிகள் முன்கூட்டியே தங்களது ஊருக்கு சென்றிருப்போம் என்று கூறினார்கள். .

---

## மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல்!

## தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் - 2026. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமனை ஆதரித்து தேசிய முற்போக்கு திராவிட கழகப் பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், எம்.எல்.ஏ., அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!

நாள் : 28.09.2026 (திங்கட் கிழமை)

| நேரம் | இடம் |
|---|---|
| மாலை 4.00 மணி | நெல்வாய் கூட்டுச் சாலை |
| மாலை 5.00 மணி | எல். எண்டத்தூர், (வேன் பிரச்சாரம்) |
| மாலை 6.00 மணி | எலப்பாக்கம் பொதுக்கூட்டம் |

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி
மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி

---

# முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா நான்காம் ஆண்டு நினைவேந்தல்

## மாவட்ட செயலாளர்கள் – சட்டமன்ற உறுப்பினர்கள் – கழகத்தினர் – பொதுமக்கள் நேரில் அஞ்சலி!

மதுரை,செப். 26-

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதி முத்தப்பன் பட்டியில் அமைந்திருக்கும் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் அன்னாரின் மணிமண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது இதில் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் குடும்பத்தினர் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பெரும் திரளான கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினார்கள் அதன் விபரம்

முன்னாள் சபாநாயகரும், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டு பெற்றவரும், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மரியாதைக்குரியவருமான சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் நான்காம் ஆண்டு நினைவேந்தல் அவரது சொந்த ஊரான முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் அவரது மணி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது

திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான சேடபட்டி மு.மணிமாறன் அவரது குடும்பத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

அதனை தொடர்ந்து மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முத்துராமலிங்கம், லதா அதியமான், முதுகுளத்தூர் முருகவேல், நாகரத்தினம், கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன், சிவனாண்டி, நிரஞ்சன், இளமகிழன், தனசேகரன், ஞானசேகரன், விமல், ஆதவன் அதியமான், ஜெயராஜ், செல்லம்பட்டி முத்துராமன், சிவமுருகன், ஆதிமூலம், மகளிர் அணி கிருத்திகா தங்கபாண்டியன், சரவணன், தனபால், ராமமூர்த்தி, மதன்குமார், தங்கபாண்டியன், பாண்டியன், ஜெயச்சந்திரன், சுதாகரன், செல்வ பிரகாஷ், சங்கர பாண்டி, எஸ்.ஓ.ஆர். தங்கபாண்டியன், ஸ்ரீதர், உசிலை சிவா, சக்தி வைரவன், கிருஷ்ண பாண்டியன், ஈஸ்வரன் மற்றும் மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மதுரை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், பல்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் என பெரும்பான்மையானோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினார்கள்

நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



தாராபுரம்(தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவுக்கு ஆதரவு கோரி சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தாராபுரம் தொகுதி சின்னபுத்தூர் ஊராட்சி பாகம் எண் 75,76,77,78 ஆகிய பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார். உடன் ரெ.மகேஷ், எஸ்.எ.கே.சித்திக். ஜோசப் பெல்சி, சாலமோன் டேவிட், எஸ்.முரளி, மேலச்செவல் கருப்பசாமி,சையதலி,ஜலால், கந்தசாமி மற்றும் கன்னியாகுமரி. கிழக்கு மாவட்ட தி.மு.க.நிர்வாகிகள் தாராபுரம் மேற்கு ஒன்றிய தி.மு.க நிர்வாகிகள் உள்பட பலர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.